மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 177/2022**

வா.சா.3 – ஆண்டி 05.06.2025

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு 1ம் வாதி ராக்கு வழக்கறிஞரிடம் தகவல் கூறினார். எனது நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். நான் கையெழுத்து போடுவேன் படிக்க தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளின் பெரியப்பா நாச்சியம்பலம், எனது அப்பா கருப்பணன் அம்பலம் ஆகியோர் தாவா சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா பெயர் சின்னன்னன் என்றால் சரிதான். கருப்பணன் அம்பலத்திற்கு பெரியாம்பிள்ளை, வீரணன், சின்னன்னன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி சின்னன்னன் மகன் தான் நான். பெரியாம்பிள்ளைக்கு நாச்சியம்பலம், கருப்பணன் ஆகியோர் வாரிசுகள். மேற்படி நாச்சியம்பலத்திற்கு வாரிசுகள் இல்லை. மேற்படி கருப்பணனுக்கு தவமணி, ராஜா, ராக்கு ஆகியோர் வாரிசுகள். பெரியாம்பிள்ளைக்கு முனியம்மாள் என்ற ஒரு வாரிசு உள்ளார் என்றால் சரிதான். வீரணனுக்கு கருப்பணன் , முனிச்சாமி, நாச்சி ஆகியோர் வாரிசுகள். கருப்பணன் மகன் தான் 1ம் பிரதிவாதி முனிச்சாமி. எனது அப்பாவிற்கு இரண்டு மனைவிகள். மூத்த தாரத்தின் பெயர் நாச்சம்மை அவருக்கு வாரிசுகள் இல்லை. எனது அம்மா பெயர் அய்யம்மாள். எனது அம்மாவிற்கு நானும் கருப்பணனும் வாரிசுகள். வாதிகளின் அப்பா கருப்பணன் அம்பலம் தாவா

1வது அயிட்ட சொத்தை 1ம் வாதிக்கு எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்த தேதியில் எந்த ஆவண எண்ணில் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. வாதிகளின் அப்பா கருப்பணன் அம்பலம் தாவா 2ம் அயிட்ட சொத்தை 1ம் வாதிக்கு எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்த தேதியில் எந்த ஆவண எண்ணில் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. தாவா 2ம் லக்க சொத்தை 1ம் வாதி 2ம் வாதிக்கு எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்த தேதியில் எந்த ஆவண எண்ணில் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. பெரியாம்பிள்ளை மகன் கருப்பணன் அம்பலத்தின் சொத்துக்கள் ராக்கு, தவமணி, முனியம்மாள், ராஜா ஆகியோருக்கு பாத்தியம் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 8ல் 1ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக ஆவணம் உற்பத்தி செய்ததாக கூறியுள்ளேன் அந்த சொத்தின் விபரம் பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் வயலுக்கு சென்ற வாய்க்காலை அழித்தது சம்மந்தமாக வாதிகள் மீது பூவந்தி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. எனது அப்பா சொத்துக்களை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். நான் 1ம் வாதி ராக்குவிற்கு வெண்ணிலை கிரைய பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. எனது அப்பாவின் சொத்தை 1ம் வாதி எதுவும் அனுபவிக்கவில்லை. எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும்

தெரியாது வாதிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை